# சர்வவியாபி

SARVA VIABI

MISSION PRESS 1840

ESTD:1.3.1907 (Year-113)

| 12-05-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் சித்திரை 29 | வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|
| புத்தகம் 56 | இதழ் 18 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |


## புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட 3 ஆவது மாமன்ற அறிவிக்கை

## (Convocation of the Third Synod of the Arch Diocese of Pondicherry & Cuddalore)




நமது இந்திய திருஅவையின் வரலாற்றில் ஒரு மைல் கல் 1844-ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் பிப்ரவரி 13 வரை புதுவையில் இடம் பெற்ற முதல் மாமன்றம் ஆகும். இரண்டாம் மாமன்றம் 1849-இல் புதுவையில் இடம் பெற்றது. முதல் மாமன்ற நிகழ்வின் 175 ஆம் ஆண்டு நினைவாக, வரும் அக்டோபர் 27ஆம் தேதி முதல் 30 ஆம் தேதிவரை மூன்றாவது மாமன்றத்தை நிகழ்த்த, புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம் கடந்த ஓராண்டளவாக பல்வேறு முன்தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தது. வரலாற்றுச் சிறப்புமிகு இந்நிகழ்வின் அறிவிக்கை விழா (Convocation of the Synod) கடந்த ஏப்ரல், 24, 2019 அன்று நமது உயர் மறைமாவட்ட பேராலயத்தில் நமது உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D.D.C.L. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

24-4-2019 புதன் அன்று காலை 10.00 மணி அளவில், பெத்தி செமினேர் ஆலயத்தில் குருக்கள், அருட்கன்னியர்கள், பொதுநிலையினர் சுமார் 300 பேர் பல்வேறு நிலைகளிலிருந்தும் பல்வேறு பங்குகளிலிருந்தும் குழுமியிருந்த வேளையில், முன்னதாக 2018 பிப்ரவரியில் ஏற்படுத்தப்பட்ட மையக் குழுவினர் (Coregroup) - பேரருள்திரு. A.**அருளானந்தம்**- உயர் மறைமாவட்ட முதன்மை குரு, அருள்திரு.**கிரகோரி**, உயர் மறைமாவட்ட பொருளர், அருள்திரு. S. **குழந்தைசாமி**, நெல்லித்தோப்பு பங்குதந்தை, அருள்திரு. R. **ஜோசப்ராஜ்,** உயர் மறைமாவட்ட கல்வி ஆணைய செயலர், அருள்திரு. S. **பாஸ்கல் ராஜ்,** உயர் மறைமாவட்ட திருமண நீதிமன்ற நீதிபதி, அருள்தந்தை A.J. **பிலோமின்தாஸ்**-உயர் மறைமாவட்ட மேய்ப்புப்பணி நடுவம், ஆகியோர் முன்னிலையில் மூன்றாவது மாமன்ற கருத்தூட்டல் அமர்வு இடம் பெற்றது.

**வரவேற்புரை:** பேரருள்திரு. ஆ. அருளானந்தம், உயர் மறைமாவட்ட முதன்மைகுரு, அவர்கள் வரவேற்புரையுடன் இணைந்த நோக்க உரை ஆற்றினார். கிறிஸ்தவம் தோன்றிய முதல் நூற்றாண்டிலேயே புனித தோமா வருகையுடன் கிறிஸ்தவம் இந்திய நாட்டுக்குள் வந்துவிட்டது. அன்றிலிருந்து இன்றுவரை, நற்செய்தியை ஏந்திச் சென்ற அனைவருக்கும் நன்றி சொல்வோம். இந்த ஆண்டு, புனித சவேரியார் புதுவை மண்ணிற்கு நற்செய்தியைக் கொண்டு வந்ததின் 475-ஆம் ஆண்டு ஆகும். அதன் தொடக்கவிழா அண்மையில் நமது பேராயரின் வழிகாட்டு தல்படி, புதுவை-உப்பளம் பங்கில் கடந்த வாரம் இடம் பெற்றது. புனித சவேரியாரைத் தொடர்ந்து பல்வேறு காலகட்டத்தில் பல சபைகளைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் நற்செய்தியை இங்கு வேரூன்றச் செய்தார்கள். மதுரையை மையப்படுத்தி பணியாற்றிய சேசு சபையினர் மதுரையிலிருந்து இங்கு புதுவைக்கு வந்து பணியாற்றி இருக்கிறார்கள். சேசு சபையின் பணிகள் திருத்தந்தையின் உத்தரவின் படி தடை செய்யப்பட்டு, புதுவை முதல் மைசூர் வரையிலான நிலப்பரப்பின் நற்செய்திப் பணி பாரிஸ் அயல்நாட்டுப் மறைப்பணியாளர்களிடம் (MEP) 1776 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் மிகச் சிறந்த பணியாற்றினார்கள். அவர்களின் பணியை செம்மைப் படுத்திக்கொள்ள 1844-இல் மறைமாவட்டத்தின் முதல் மாமன்றத்தை நிகழ்த்தினார்கள். இம்மாமன்றத்தில் (1) சுதேசி குருக்கள் உருவாக்குதல் 2) பெண்கல்வி ஊக்குவித்தல் 3) பெண் துறவியர் சபை நிறுவுதல் 4) இன்னும் பிற கருத்துகளும் ஆராயப்பட்டன. அதன்படி, பெத்தி செமினேர், இமாக்குலேட் அருட்கன்னியர் சபை, கொன்சாகா அருட்கன்னியர் சபை, இமாக்குலேட் பெண்கள் பாடசாலை ஆகியன தொடங்கப்பட்டன. மாமன்றத்தின் கொள்கைத் திரட்டு மற்றும் முடிவுகள் உரோமையினால் அங்கீகாரம் செய்யப்பட்டது. 1849-ஆம் ஆண்டு (முதல் மாமன்றம் இடம் பெற்றபின் ஐந்தாம் ஆண்டில்) இரண்டாவது மாமன்றம் கூட்டப்பட்டு, முதல் மாமன்ற முடிவு கள் எந்த அளவு செயல்படுத்தப்பட்டன என்று ஆராயப்பட்டது. 1844 முதல் மாமன்றத்தின் 175 ஆம் ஆண்டு நினைவாக நமது பேராயர் மேதகு டாக்டர் அந்தோணி ஆனந்தராயர் D.D.,D.C.L., அவர்கள் மூன்றாவது மாமன்றத்தை இன்று அறிக்கை செய்கிறார். இம்மாமன்றம், நமது விசுவாச மற்றும் சமூக வாழ்வின் எல்லா நிலைகளிலும் திறனாய்வு செய்து மிகச் சிறப்பாக கொள்கை முடிவுகளை முன்னெடுத்து, செயல்பட்டு இறைமக்களின் அனைத்து வாழ் கூறுகளிலும் முன்னேற்றம் காண இந்த மாமன்றம் வழிவகுக்கும் என்ற எண்ணத்தில் தொடங்கப்படுகிறது. இந்த மாமன்றம் நமது உயர் மறை மாவட்டத்திற்கு மட்டுமல்ல, இந்திய திருச்சபைக்கே ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இம்மாமன்றம் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்." இவ்வாறு பேரருட்தந்தை

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்..

முதல் பக்கத் தொடர்ச்சி..




அவர்கள் தமது வரவேற்புரையுடன் இணைந்த நோக்கவுரையை நிறைவு செய்தார்.

**கருத்தூட்டல் அமர்வு:** கருத்தூட்டல் அமர்வை அருட்தந்தை A.J. பிலோமின்தாஸ் நிகழ்த்தினார்:

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம் முன்னெடுக்கும் மூன்றாவது மாமன்றத்தின் மையக் குழுவினர் சார்பாக இங்கு உங்கள்முன் நான் நிற்கிறேன். இந்த மாமன்றத்தின் - Synod - நோக்கம் "**இறைவனில் நிறைவாழ்வை பெறுவதே**". நாம் இன்றைய காலகட்டத்தில், எதனை நோக்கி பயணிக்கிறோம் என்பதை சிந்தித்து, அதன் விளைவாக தீர்க்கமான முடிவுகளை முன்வைத்து நம் பயணத்தை தொடரவே இந்த மாமன்றமும், கருத்தூட்டல் அமர்வும். நமது பழம்பெரும் உயர் மறைமாவட்டத்தின் உயர்மட்ட பொறுப்பில் உள்ளவர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களது நன்மனதையும் ஆர்வத்தையும் பாராட்டி உங்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன்.




நமது முன்னாள் பேராயர் மேதகு S. **மைக்கேல் அகுஸ்தீன்** அவர்கள் 2000-ஆம் ஆண்டில் ஒரு மாமன்றம் (Synod) - நிகழ்த்த முயன்றார். அப்பொழுதுதான் "Synod" (மாமன்றம்) என்ற வார்த்தை அனைவருக்கும் பயன்பாட்டுக்கு வந்தது.

நமது இன்றைய பேராயர் அவர்கள் 2016-ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம் பெற்ற - செனேட் - மன்றத்தில் மூன்றாவது மாமன்றம் குறித்து பேசினார். ஆயர்த்துவப் பணியில் பல உதவி அமைப்புகள் உண்டு. Council (ஆலோசனைக்குழு), செனேட் போன்றவை. அவற்றில் ஒன்று மாமன்றம் (Synod) ஆகும். இது ஆயர், குருக்கள் மற்றும் இறைமக்கள் ஆகிய முத்தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் அமைப்பு. குருக்களுக்கு அடுத்தபடியான இறைமக்கள் குழுவில் அனைத்து துறவியரும் இடம் பெறுகிறார்கள். திருச்சபை சட்டம் 460-468-இன்படி, ஒரு மாமன்றம் என்பது ஒரு தலத்திருச் சபையின் தேர்ந்தெடுக்கப் பட்ட குருக்கள், துறவியர் மற்றும் பொது நிலையினர் ஒன்றுகூடி இறைபிரசன்ன அனுபவத்தில் மதம் சார்ந்த, மற்றும் சமூக பொருளாதார சூழலுக்கேற்ப வார்த்தெடுக்கும் ஒழுங்குமுறைகள் மற்றும் விதிமுறை களுக்கேற்ப மறை மாவட்ட சமூக முழு நன்மைக்காக மறை மாவட்ட ஆயருக்கு உதவி செய்கிறது. பல்வேறு தரப்பினருக்கான வழிபாடு, பாதிக்கப்பட்டவர்கள், துறவியர், விளிம்பு நிலையினர், மற்றும் சமூகக் கூறுகளை மேம்படுத்த இது உதவு கிறது.



முதல் மாமன்றம் 1844-இல் இடம் பெற்ற போது, அதில் 18 குருக்களும் 2 துறவு சபை குருக்களும் பங்கேற்றனர். மேதகு போனான் (BONNAND) ஆண்டகை அவர்கள் மாமன்றம் நிகழ்த்த திட்டமிட்ட அன்றைய வேளை, மறைமாவட்டம் என்ற நிலையை நம் மறைமாவட்டம் எட்டவில்லை. ஆயர் மறைப்பணித் தலைவர் (Superior of The Mission) என்றே அழைக்கப்பட்டார்; மொத்தம் 19 குருக்கள் மறைப்பணியை கவனித்தனர். புதுவை முதல் மைசூர் மண்டலம் வரையிலான இந்த மாபெரும் நிலப்பரப்பில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த இறை மக்களின் அனைத்து தேவைகளையும் மனதில் கொண்டு அவர்கள் பணிபுரிய வேண்டி இருந்தது. எனவே, அதற்கான ஒரு ஒழுங்குமுறை தேவை, விதிமுறைகள் தேவை என்று பேராயர் அவர்கள் உணர்ந்தார். இதனால் முதலில் பேரவை நடத்தலாம் என்று கடிதம் அனுப்பினார்.

இந்த முதல் மாமன்றத்தினை நிகழ்த்தும் பொறுப்பினை



அருட்தந்தையர்கள் துப்புயி, லிக்கெத், ரோஷர், ஷம்பெனுவா ஆகியோரிடம் ஒப்படைத்தார். அவர்கள் ஒன்றுகூடி ஒருவாரம் சிந்தித்தனர். அவர்கள் தேர்ந்தெடுத்த தலைப்புகளை பேராயருக்கு முதலில் அனுப்பி வைத்தனர். அவை: 1) சுதேசி (உள்நாட்டு) குருக்களை உருவாக்குவது 2) கிறிஸ்தவர்களை பராமரிப்பது, 3) கிறிஸ்தவர் அல்லாதவருக்கு நற்செய்தி அறிவிப்பது (Conversion of Gentiles). இதனடிப்படையில் 147 கேள்விகள் அடங்கிய ஒரு கோப்பினை உருவாக்கி னார்கள். இவற்றை உற்று நோக்கிய பேராயர் அவர்கள், இதனை பேரவையாக இல்லாமல் மாமன்றமாக நிகழ்த்தலாம் என்று முடிவு செய்தார்.

1844, ஜனவரி, 14 முதல் பிப்ரவரி 13 வரை இந்த மாமன்றம் நமது மறைமாவட்ட பேராலயத்தில் நடைபெற்றது. குருக்களின் பணி அனுபவம், மறைப்பணி தளத்தின் பூகோள அமைப்பு, இங்கு வாழும் மக்களின் கலாச்சாரம் ஆகியவற்றின் பின்னணியில் இம்மாமன்றம் நிகழ்ந்தேறியது. இதன் முடிவுகளை ஆவணமாக அருட்திரு. லிக்கேத் உரோமைக்கு எடுத்துச் சென்றார். உரோமை திருப்பீடம் இதனை ஆராய்ந்தது. 1845-பிப்ரவரி மாதம் திருத்தந்தை இம்மாமன்றத்தின் முடிவுகளை அங்கீகாரம் செய்தார். இதனடிப்படையில் அன்றைய மறைப்பணியாளர்களின் பணிகளும் செயல்பாடுகளும் அமைந்தன.

இப்பொழுது நாம் தொடங்கும் மூன்றாவது மாமன்றம், இதன் பின்னணியில்தான் அமைகிறது. நமது பேராயர் அவர்கள், மைய குழு ஒன்றை உருவாக்கி கடந்த ஓராண்டளவாக இதற்கான அடிப்படை ஏற்பாடுகளை செய்த வருகிறார். இம் மைய குழுவினர் முன்வைக்கும் கருத்துகளின்படி ஆறு தலைப்புகள்

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்..




பாஸ்கா காலம் 5-ம் ஞாயிறு (19-05-2019) திபா.13:14,43-52 திருவெளி.7:9,14ஆ-17 யோவான்.10:27-30

# "அன்பின் மக்களாவோம்"



அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.

**1855** ம் ஆண்டு புனித தொன்போஸ்கோ குருவானவராக இருந்தபோது ஒரு நாள் ஒரு சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருந்த கைதிகளுக்கு தியானம் கொடுக்கச் சென்றிருந் தார். இவரது ஆற்றல் மிக்க போதனையால் மனங்கவரப்பட்ட பல கைதிகள் மனமாற்றம் அடைந்தனர். அவர்களில் பலர் புனித தொன்போஸ்கோவோடு ஒருநாள் சுற்றுலாச் சென்றுவர ஆர்வம் தெரிவித்தனர். தொன்போஸ்கோவும் அவர்களுடைய ஆர்வத்தை சிறை அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். அவர்கள் அனுமதி தர மறுத்துவிட்டார்கள். பின்பு தொன்போஸ்கோ தனக்கு நன்கு தெரிந்த அமைச்சரிடம் இது குறித்துப் பேசினார். அந்த அமைச்சர் தொன்போஸ்கோவிடம், "சரி நீங்கள் கேட்டதால் நான் அனுமதிக்கிறேன்; ஆனால் உங்களோடு ஒரு சில காவலர்களையும் நாங்கள் அனுப்புவோம்" என்றார். அதற்கு தொன்போஸ்கோ, "தேவையில்லை! காவலர்கள் வந்தால் அது கைதிகளுக்கு இனிமையாய் இராது.என்னோடு வருகின்ற கைதிகளில் ஒருவர் தப்பிச் சென்றாலும் அவருக்கு பதிலாக நான் சிறையிலிருக்க தயாராக இருக்கிறேன்" என்றார். மகிழ்ச்சியோடு அனைத்து கைதிகளும் சுற்றுலா சென்றனர். அன்று மாலை எல்லாக் கைதிகளும் பத்திரமாக சிறைக்கு திரும்பினர். ஆச்சரியப்பட்டு கேட்ட சிறை அதிகாரிகளுக்கு புனித தொன் போஸ்கோ இவ்வாறு கூறினார். "நான் இங்கு இருக்கும் அனைத்து கைதிகளையும் முழுமையாக அன்பு செய்கிறேன். அவர்களும் என்னை முழுமையாக மனதார அன்பு செய்கிறார்கள். உண்மையான அன்பு இருப்பவர் களிடத்தில் ஒளிவு மறைவு எதுவும் இருக்காது. உண்மையான அன்பாய் இருப்பவர்கள் எப்பொழுதும் பிரிய மாட்டார்கள்."

**அன்பே - உலகம்:** அன்புதான் மனிதகுலத்தின் உயிர் நாடி. அன்பானவர்கள் இருப்பதால்தான் இந்த உலகமானது இன்னும் இயங்கிக்கொண்டிருக்கிறது. அன்பைக் கொடுக் கவும், பெறவும் விரும்புவதே மனித இயல்பு. இந்த பரிமாற்றம் நிகழாதபோது ஒருவன் பணம், பட்டம், பதவி, செல்வாக்கு என்று எல்லா வசதி வாய்ப்புகளோடு வாழ்ந்தாலும் அவர் நடைபிணமாகவே கருதப்படுவார். எல்லாரிடமிருந்தும் நாம் அன்பைப் பெற வேண்டும். அதை பிறருக்கும் திருப்பி கொடுக்க வேண்டும். அன்பு இல்லாத ஒரு வாழ்வு மனித வாழ்வு அன்று. இயேசுவே அன்பின் இலக்கணம். நமக்காக சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்ததே அவருடைய அன்பின் மிகச் சிறந்த வெளிப்பாடு. அவரின் அன்பு எல்லையற்றது, நிபந்தனை யற்றது. நாம் அனைவரும் அன்பின் மக்களாக இருக்க வேண்டுமென்பதே அவருடைய விருப்பம். அவருடைய நிறை அன்புக்கு நாம் சாட்சிகளாக வாழ வேண்டுமென்றும் விரும்புகிறார். இன்றைய நற்செய்தியில் இயேசு, "நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்கிறார். எனவே நாம் பிறரை அன்பு செய்வதற்கு எவைகள் தடையாக இருக்கின்றன; எவைகள் உறுதுணையாக இருக்கின்றன என்பதை சற்று அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

**சுயநலம்:** 'நான்', 'எனது', 'என்குடும்பம்' போன்ற சுய நல வாழ்க்கைதான் நாம் பிறரை அன்பு செய்வதற்கு முதல் தடைக்கல்லாக இருக்கின்றது. இயேசுவின் அன்பு தன்னலம் அற்றது. பெறுவதில் அன்று, அளிப்பதில்தான் அன்பின் எல்லையைக் காண்கிறோம். இயேசு தன்னையே நமக்காக அழித்துக் கொள்ளும் அளவுக்கு நம்மீது அன்பு செலுத்தினார். எனவே பிறர் அன்பில் தம்மையே பலியாக்கும் தியாக வாழ்வை, தன் சீடர்களிடம் (நம்மிடம்) எதிர்பார்க்கிறார்; இயேசு எவரையும் இகழ்ந்து ஒதுக்கவில்லை. அவரின் அன்பு அனைவரையும் தழுவியது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர், பாவிகளாக எண்ணப்பட்டோர் போன்றவர்களைத் தேடி பிடித்து, தன் அன்பை பொழிந்தார். அவரைப் போல் தன்னலம் நாடாது, கைம்மாறு எதிர்பாராது, தியாக மனப்பான்மையோடு பிறர்மீது அன்பு செலுத்தும் போதுதான் நாம் அவரது உண்மைச் சீடர்களாக மாறுவோம்.

**குறை-நம் பகை:** மனிதர்கள் எல்லோருமே முழு நிறைவோடு வாழ்பவர்கள் அல்ல. மனித பலவீனத்தால் குறை களும் உண்டு. குறைகள் இல்லாமல் எப்பொழுதுமே மகிழ்ச்சியாக பயணம் செய்வது இயலாத காரியம். கடவுள் நம் அனைவரையும் தன்னுடைய சாயலாக படைத்துள்ளார். எனவே பிறரில் நாம் கடவுளின் சாயலைக் கண்டால் குறைகளைப் பார்க்க மாட்டோம், நிறைகளை மட்டுமே பார்ப்போம். "பிறருடைய குறைகளை மட்டுமே நீ பார்த்துக் கொண்டிருந்தால் அவர்களை அன்பு செய்ய உமக்கு நேரம் இருக்காது" என்கிறார் புனித அன்னைத் தெரசா. இவ்வாறு அன்பு இருக்கின்ற இடத்தில் பெரிய குறைகள் கூட சிறிய மலையாகத் தெரியும், அன்பு இல்லாத இடத்தில் சிறு குறைகள் கூடபெரிய மலையாகத் தெரியும். எனவே பிறரில் நாம் காணும் குறை, நம் அன்பு வாழ்க்கையின் பகையே.

**காலம் பொன் போன்றது:** இந்த நவீன உலகில் எல்லோருடைய நாவிலிருந்தும் வருகின்ற அதிகமான வார்த்தைகள். "நான் கொஞ்சம் வேலையாக இருக்கிறேன்", "நான் ரொம்ப பிஸி" "எனக்கு நேரம் இல்லை". நாம் பிறரை அன்பு செய்யாமலிருப்பதற்கும், நம் அன்பு பிறரிடம் துண்டிக்கப்படுவதற்கும் நம்முடைய நேரத்தை பிறருக்காக செலவழிக்காமல் இருப்பதே மிக முக்கியமான காரணம் ஆகும். காலம் பொன் போன்றது, கடமை கண்போன்றதுதான், ஆனால் அனைத்தையும் இழந்த பிறகு கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு? என்பதுபோல் ஆகிவிடக் கூடும். எனவே நம்முடைய பெற்றோர், உடன் பிறந்தவர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் நமக்கு அறிமுகமானவர்கள், குறிப்பாக சிறு குழந்தைகளோடு நமது நேரத்தை அவர் களுக்காக அர்ப்பணிக்க வேண்டும். இதனால் நம்முடைய அன்பு வாழ்வு வளமடையும்.

**அன்பின் மக்களாவோம்:** அன்புக்கு இலக்கணம் வகுத்தவர் இயேசு; காட்டிக் கொடுத்தவனையே தட்டிக் கொடுத்தது இயேசுவின் அன்பு. மறுதலித்தவரையே மன்னித்து தலைவராக்கியது இயேசுவின் அன்பு. விட்டுப் பிரிந்தவர்களோடே ஒட்டி உறவாடியது இயேசுவின் அன்பு அழிக்க துடித்தவரையே அரவணைத்து பணிக்கு அனுப்பியது இயேசுவின் அன்பு. இன்றைய சமூகத்தில் நிலவும் பொறாமை, சுயநலம், குறை கூறுதல், ஆதிக்கப் போக்கு இவற்றின் மத்தியில் நம்மால் அன்பின் மக்களாக வாழ முடிகிறதா? அன்பு, பாசம் இல்லாத பெற்றோர்களை விட்டுவிட்டு திசை மாறிச் சென்று கொண்டிருக்கும் பிள்ளைகள் எத்தனைப் பேர்? அன்புக்காக ஏங்கி ஏங்கி தற்கொலைக்குத் தள்ளப்படும் இளைஞர்கள் எத்தனைப் பேர்? உண்மை அன்புக்காக ஏங்கி நான்கு சுவருக்குள்ளே வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் உள்ளங்கள் எத்தனை? எத்தனை? சமுதாயத்தில், நாட்டில், திருஅவையில் தீவிரவாதம் தீவிரமாக இருப்பதற்கு காரணம், குடும்பத்தில் உண்மையான அன்பு விதைக்கப் படாததுதான். "கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த இயலாது" (1யோவா.4:20) என்கிறார் திருத்தூதர் புனித யோவான். எனவே அன்பின் மக்களாவோம். இயேசுவின் சாட்சியாவோம். ●

நாம் விரும்பியதை செய்வதில் அல்ல சுதந்திரம், ஆனால் நாம் எதை செய்யவேண்டுமோ அதை செய்வதற்கான தகுதியை பெற்றிருப்பதில் இருக்கிறது. -திருத்தந்தை 2ம் ஜான்பால்



## இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (24)

ME Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**104."... அப்படியானால் திராட்சைத் தோட்ட உரிமையாளர் அவர்களை என்ன செய்வார்?"** (லூக் 20:15)

புறக்கணிக்கப்பட்ட மெசியாவை விலக்கப்பட்ட மூலைக்கல்லுக்கு இயேசு ஒப்பிட்டதை மத்தேயு 21:42- இல் பார்த்தோம். இந்த உவமையிலும் அதே கருத்து ஊருக்குப் புறம்பே தள்ளப்பட்டுக் கொல்லப்பட்ட திராட்சைத் தோட்ட உரிமையாளரின் வாரிசுக்குத் தம்மை ஒப்பிட்டுக் கூறுகிறார்.

இந்த மெசியா வாழ்வின் இளவரசரும் மாட்சியின் ஆண்டவரும் ஆவார். "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்" (தி.ப. 2:36)

இஸ்ரயேல் மக்களிடம் அனுப்பப்பட்ட இறைவாக்கினர் பலரைக் கொன்று கிறிஸ்துவையும் சிலுவையில் அறைந்த பரிசேயர் உவமையில் வரும் திராட்சைத் தோட்டக் குத்தகைக் காரர்களை ஒத்திருக்கின்றனர் என்பது தெளிவாக அவர்களுக்குப் புரிந்திருக்கும்.

**105. "வெளிவேடக்காரரே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்?"** (மத் 22:18)

இயேசு அவர்களின் வெளி வேடத்தை அறிந்தவராய் என்று மாற்கு குறிப்பிடுகிறார். என்ன உள் நோக்கத்தோடு அவர்கள் இயேசுவிடம் கேள்வி கேட்கின்றனர் என்பதை அவர் அறிந்திருந்தார்.

வெளிவேடத்தில் மறைந்திருப்பது போலியான நேர்மை, பொய்யான தாழ்ச்சி, பக்தியான பாவனை, இப்படி பல. இயேசு தொடக்கத்தில் இருந்தே பரிசேயர்களுடைய முகமூடிகளைக் கிழித்தெறிந்தார். விபசாரிகளுக்குக் காட்டிய இரக்கத்தை வெளிவேடக்காரர்களுக்குக் காட்டவில்லை. அவர்கள் என்ன திறமையான முகமூடி அணிந்திருந்தாலும் இயேசு அவற்றை ஊடுருவிப் பார்க்க வல்லவர் என்பதைப் பல முறை அனுபவித்து அறிந்திருக்கிறார்கள். அவர்கள் கேள்வி கேட்பது அறியாததை அறிந்துகொண்டு பின்பற்றுவதற்கு அல்ல, மாறாக எப்படி இயேசுவைத் தங்கள் கண்ணியில் சிக்க வைக்கலாம் என்பதற்காகவே. எனவேதான் இயேசு ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? என்றார்.

**106. "ஒரு தெனாரியத்தை எனக்குக் காட்டுங்கள். இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?"** (லூக் 20:24)

இயேசுவை யூத சமயத்தை எதிர்ப்பவர் என்று குற்றம் சாட்டத் தேடி அதில் தோல்வியுற்றார்கள். இப்போது அரசுக்கு எதிரானவர் என்று குற்றம் சாட்டத் தேடுகின்றனர். கிறித்தவம் இவ்வுலக அரசுக்கு எதிரி அல்ல. வார்த்தைகளில் வலை வீசி சிக்க வைக்க வந்தவர்களை இயேசு நிஜத்தைத் தொட்டுப் பார்க்க அழைக்கிறார்: "ஒரு தெனாரியத்தை எனக்குக் காட்டுங்கள். இதில் பொறிக்கப் பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை? செசாருக்கு வரி செலுத்தலாமா வேண்டாமா என்ற இரு கேள்விகளால் மடக்க வந்தவர்களை ஒரே கேள்வியில் இயேசு மடக்கிவிட்டார்.

செசாருக்கு உரியதை செசாருக்கும் கடவுளுக்கு உரியதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள். கடவுளைப்பற்றி அக்கறையின்றி இருந்தவர்களை அக்கறைகொள்ள அழைத்துவிட்டார்.

**107. "உங்களுக்கு மறைநூலும் தெரியாது கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால் தான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்."** (மாற்12:24)

மறைநூல் பற்றிய சரியான அறிவிலிருந்து உண்மையான சமயம் ஊற்றெடுக்கிறது. சமயத்தோடு உண்மை மட்டுமல்ல கடவுளின் வல்லமையும் இணைந்துள்ளது.

உயிர்த்தெழுதல் இல்லை எனக் கூறும் சதுசேயர் பெரியதொரு கேலிக்கதையைப் புனைந்து இயேசுவிடம் கேட்டனர்.

அதற்கு முதலில் மறைநூல் அறிஞர்களின் அறியாமை யையும் பிறகு கடவுளின் வல்லமையையும் பற்றிக் கூறுகிறார் இயேசு. இஸ்ரயேலின் கடவுள் வாழ்வோரின் கடவுள் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

உயிர்த்தெழுதல் பற்றி எழுதப்பட்டுள்ள மறைநூலும் அவர்களுக்குத் தெரியாது என்று குறிப்பிடுகிறார். எசாயா நூல் 26:19-இல் "இறந்த உம் மக்கள் உயிர்பெறுவர். அவர்களின் உயிரற்ற உடல்கள் மீண்டும் எழும். புழுதியில் வாழ்வோரே, விழித்தெழுந்து மகிழ்ந்து பாடுங்கள். ஏனெனில், நீர் பெய்விக்கும் பனி ஒளியின் பனி, இறந்தோர் நிழல்களின் நாட்டிலும் அதை விழச் செய்கின்றீர்." உயிர்த்த உடல் மீண்டும் இறப்பதில்லை. அது நித்தியமானது.

இறந்துபோய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர், வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர். (தானியேல் 12:2)

**108. "இறந்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றிக் கடவுள் உங்களுக்கு உரைத்துள்ளதை நீங்கள் வாசித்ததில்லையா? ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே!"** (மத் 22:31-32)

பல இடங்களில் இயேசு "நீங்கள் மறைநூலில் வாசித்ததில்லையா?" என்றும் "ஒருபோதும் வாசித்த தில்லையா?" என்றும் "எவ்வாறு வாசிக்கிறீர்?" "என்ன வாசிக்கிறீர்?" என்றும் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்.

இந்த மறைநூல் அறிஞர்கள் அரைகுறையாகப் படித்துவிட்டு, அறிவின் திறவு கோலையும் சட்டத்தையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு தங்களுக்குச் சாதகமாகவே போதித்து மக்களை ஏமாற்றி வந்தனர் என்பதை இயேசு கண்டார். எனவே வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அவர்களுடைய அறியாமையைச் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் மறைநூல் தெரியாததால் தவறான கருத்துக்களை அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட இயேசு தவறவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வாழ்வதுதான் பேரானந்தம். மோட்சம் அப்படித்தான் இருக்கும் என்று புரிந்திருந்தார்கள்.

தொடரும்

## இறைவனில் இணைந்த 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு. L. லப்பாஸ்**
**மரி பிலோமேன் பெலிசியன்**

**தோற்றம்: 20-11-1950**
**மறைவு: 16-05-2010**

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16–05–2019 வியாழக் கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**
**மனைவி:**
**A. மரி ஜெயந்தி லப்பாஸ்**
நெல்லித்தோப்பு, புதுவை.



# உயிர்த்தெழும் வாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

உயிர்ப்பின் காலத்தில் தாய்த் திருஅவை தனது பிள்ளைகளை பரிவோடு நினைவுபடுத்தி, ஒப்புரவு அருட்சாதனத்தைக் கொண்டாடி, திருவிருந்தில் பங்கெடுக்க கனிவோடு அழைக்கின்றது. ஏனெனில் கடவுளின் மக்கள் வாழ வேண்டும் என்பதே அவருடையத் திருவுளம்,யாரையும் இழக்கக் கூடாது என்பது தாயின் பாசம். உயிர்த்த என் இறைவன், எனைத் தேடி வந்தார், என் நம்பிக்கை பலமானது, ஒருபோதும் இனி நான் பயம் கொள்ள மாட்டேன். என் ஆண்டவரின் அடித்தொட்டு நடப்பேன். என் ஆண்டவரே, என் தேவனே, நீர் என் கடவுள். ஐயா நீரே என் கடவுள். புனித தோமையாரின் அனுபவம் இன்று திருவிருந்து நிகழ்வில் தொடுவதைவிட அவரோடு ஒன்றுபட கடவுள் திருஅவை வழி அருள்புரிவது எவ்வளவு ஆனந்தம் என்று இக்காலத்தில் கிறிஸ்தவ மக்கள் உயிர்த்தெழ இறைவன் அழைக்கின்றார்.

**நேற்று-இன்று-நாளை:** நேற்றைய தினம் கடந்துவிட்டது கவலை வேண்டாம், நாளைய தினம் நம்கையில் இல்லை. கவலை வேண்டாம். இன்றைய தினம் நாம் அனுபவிக்கும் நாள். அன்றன்றைக்குள்ள அருள் போதும் எங்கள் அன்றாட உணவைத் தந்தருளும் என்று நிகழ் காலத்தில் மன அமைதியோடு வாழ்வோம். வாழவைப்போம். வாழ்வில் கவலைப் படுவதால் யாருக்கும் எந்தவித இலாபமும் இல்லை. நம்பிக்கை நாளும் வளர்ந்தால் கடவுள் யாரையும் இதுவரை கைவிடவில்லை, இனிமேலும் கைவிடமாட்டார் என்று ஆழமாக, அசையாத நம்பிக்கைக் கொள்வோம். தன்னிடம் இருப்பது எல்லாவற்றையும் நமக்காகக் கொடுத்துவிட்டார், நாம் தான் பகிர்ந்துண்டு பல்லுயிர் ஓம்புவது உத்தமமாகும். களஞ்சியத்தில் சேர்த்து வைத்தால் நாம் காணாமல் போய்விடுவோம். முழுமையாக வாழ்வோம், வாழ வைப்போம்.

**உயிர்த்தத ஆவி:** படைப்பு-மீட்பு-புனிதம் என்ற முப்பெரும் அருளை உயிர்த்த ஆண்டவரின் ஆவி நமக்கு அருளி வழிநடத்திக்கொண்டு வருகிறது. இயேசுகிறிஸ்துவை முழுமையாக அனுபவிப்பது ஆவியின் ஒன்றிப்பில்தான். ஆவிதான் மெய்மை, மற்ற படம், திருஉருவம் எல்லாம் ஆவியின் அடையாளங்களாகும். அடையாளங்களில் மட்டும் நாம் தேங்கிவிடாமல் ஆவியை நோக்கி எழுவது, வழிபடுவது தான் முறையாகும். நமது வெளிப்புலன்கள், உட்புலன்கள் இவைகளை மட்டும் பயன்படுத்தி உடல் நிலையில் இருப்பதை விட ஆவியிலும் உண்மையிலும் தொழும் மெய்யடியார்களாய் விளங்குவது முக்கியம். எனவேத்தான் ஒவ்வொரு வழிபாட்டு கொண்டாட்டமும் பக்தர்களை ஆவியை நோக்கி அழைத்துச் சென்று, அமைதியில் அனுபவிக்க நாம் விழிப்போடு இருப்பது நமது கடமையும் பொறுப்புமாகும். புலன்களின் சோதனை நம்மைவிட்டு நீங்காது, நாம்தான் முயற்சி,பயிற்சி வழியாக ஆவியில் ஆவியால் ஆவியை நோக்கி பயணிப்பது பயன்மிக்கது. இதற்காகவே வழிபாடுகள் அனைத்திலும் புனித மௌனம் முக்கியத்துவம் பெறுகிறது. நாம் அமைதி ஆனால்தான் ஆவியானவர் நம்மில் செயலாற்ற இயலும். நமது வழிபாடுகளில் மக்களை அதிகமாக அமைதிக்கு அழைத்துச் செல்வது, பயிற்றுவிப்பது முக்கியமாகும்.

**ஆவி வழி வாழ்வு:** ஆவிதான் வாழ்வு, நமது உடல் வாழ்வல்ல, வாழ்வைப் பெறும் கருவியாகும். எனவேதான் புனித பவுலடியார் ஆவியால் வழிநடத்தப்படுகின்றவர்களே புதியப் படைப்பு, கிறிஸ்தவன் என்று தெளிவுபடுத்துகிறார். இச்சைகளுக்கு இடம் கொடுத்தால், அவை நம்மை அழிவை நோக்கி அழைத்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. வாழ்வுக்கு எப்போதும் முதலிடம் கொடுப்போம்.

“சோறு கண்ட இடம் சொர்க்கம்” என்று யாரும் எப்போதும் ஏமாந்துவிட வேண்டாம். உணவு நமக்கு மிகவும் தேவை என்ற கருத்தை நாம் அதிகமாக உள்வாங்கிவிட்டோம். ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவே போதும் என்ற சிந்தனை, செயல்மாற்றம் இடம் பெற்றால் அனைவருக்கும் மிகுந்த பயன் கிடைக்கும். ஒரு சில வாரங்கள் இவ்வாறு பழகிப் பார்த்தால், அதன் பயன்கள் மிகவும் நமக்கு அதிசயமாக இருக்கும், வேலையும் குறையும், செலவும் குறையும், வாழ்நாள் அதிகமாகும். இதனால்தான் அடிக்கடி நோன்பு இருக்க ஒவ்வொரு சமயமும் நமக்கு அழைப்பு அளிக்கின்றது. இத்தகைய நெறியின் படி நமது நாட்டு மக்கள் வாழ்வதுண்டு. இன்றைய சூழ்நிலையில் உண்பதற்குப் பல்வேறு விதங்களை வீதியில் வைத்து மக்களை மயக்கி விரைவு உணவை உண்டு வேதனைப்படுவதையும் கண்டு வருகிறோம். உணவின் சோதனை நம்மை எளிதில் விட்டுவிலகாது. இன்பவனத்திலிருந்து இன்றுவரை நம்மை வலம் வரும் சோதனைக்கு இடம் தராமல் இருப்பது எவ்வளவு நல்லது. இல்லையேல் கண்டதையும் தின்று மருத்துவமனையில் செலவழிப்பது நவீன கலாச்சாரமாக அமைந்து வருகிறது. விழிப்போடு ஆவிக்குச் செவிமடுப்போம்.

**விழித்தெழுவோம்:** உயிர்த்த ஆண்டவரின் ஆவிக்கு உறக்கமில்லை. உடல்தான் ஓய்வை எப்போதும் நாடுகிறது. உண்பது, உறங்குவது என்ற பண்பாடு நம்மை ஆட்கொள்ள முயல்கின்றது. உடலுக்குள் ஆவி உள்ளது. அந்த ஆவியில்தான் மூவொரு கடவுள் இருக்கின்றார். இத்தகைய நினைவு உணர்வு, கவனம் நமது மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்படவே கடவுள் வழிகாட்டிகளை வழங்கி வருகிறார். வழிகாட்டிகள் விழிப்போடு இருந்து, மக்களால் திசைத் திருப்பப்படாமல் கவனமாய் இருந்து, அன்பின், நீதியின், நன்மையின் பாதையில் வழிநடத்திச் செல்வது முக்கியம். கடவுள் இலவசமாய் வழங்குவதை சட்டம், ஒழுங்கு, நிதி, நெறி என்று வலைகளைப் போட்டு சிறைப் படுத்தாமல் எளிதாக சுதந்திர உணர்வோடு மக்களை வழிநடத்துவது மேலானது. இத்தகையப் பண்பை சமூகத்திலும் சமயத்திலும் கடைபிடிப்பது முக்கியம். உடனடித் தேவைகளை முன்னிலைப் படுத்தி அவைகளின் விளைவுகளை உணராமல் நாம் திசை மாறிவிடக் கூடாது. இன்றைய சூழலில் பணம் படும்பாடு, படுத்தும்பாடு நாம் அனைவரும் அறிந்ததே. எனவே ஆவியால் வழிநடத்தப்பட்டால் உடலுக்கு உகந்ததாகும். உடலால் வழிநடத்தப்பட்டால் உடலும் பாதிக்கப்படும், வாழ்வும் பாதிக்கப்படும். கடந்த கால அனுபவங்களை ஆய்வு செய்து வாழ்வில் வளர்வது,இலக்கை நோக்கிப் பயணிப்பது, முன்னேறுவது, வெற்றி வாழ்வை மேற்கொள்வது முக்கியம். உயிர்த்த ஆண்டவர் என்றும் வழி காட்டுவார்.

---


“தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள்” கலா.5:16

**புதுவை கடலூர் உயர் மறைமாவட்ட மூன்றாவது கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்பு மாநாடு**

நாள் : **17,18,19-05-2019 (வெள்ளி, சனி, ஞாயிறு)**

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப் பணி & கலைத்தொடர்பு நிலையம்.**

(புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வளாகம்) நேத்தாஜி நகர்-1, உப்பளம், புதுச்சேரி-1)

நடத்துபவர்: அருட்பணி. S. **ஆரோக்கியசெல்வன்,**
புனித நார்பெர்ட் துறவற சபை, (மனநல ஆலோசகர், பட்டதாரி ஆசிரியர்), திருச்சி.

அருட்பணி. **டோமினிக்,** OSM
உதவி பங்குத்தந்தை, ஜெகன்மாதா ஆலயம், திருச்சி.

சகோதரர் திரு. **ஹென்றி,** பட்டதாரி ஆசிரியர்
R.C. மேல்நிலைப்பள்ளி, திருச்சி.

சகோதரர் திரு. **இன்பநாதன்,** இசையியல் பட்டதாரி ஆசிரியர்,
அருங்கொடை இசைக் கலைஞர், திருச்சி மற்றும் குழுவினர்.

**மாதாவின் அருள் ஜெப ஊழியம், திருச்சி.**

**அனைவரும் கலந்துகொண்டு இறை ஆசீர் பெற அழைக்கின்றோம்.**

இவண், அருட்தந்தை **பிலோ,** இயக்குநர்

மற்றும் மைய செப தயாரிப்பு குழுவினர், புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம், புதுச்சேரி.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363

# குருத்துவ வெள்ளிவிழா காணும் குருக்களை வாழ்த்துகிறோம்.

## அருட்தந்தை A. ஆல்பர்ட் பெலிக்ஸ்



**க**க்கனூர் பங்கு திரு. ஆனந்தன்-திருமதி. லூர்துமேரி இவர்களின் மகனாக அருட்தந்தை A.ஆல்பர்ட் பெலிக்ஸ் கக்கனூரில் 28-06-1967-ல் பிறந்தார். 08-07-1967-இல் கக்கனூரில் திருமுழுக்குப் பெற்றார்.

1973 முதல் 1981 வரை 1-8 வகுப்பு கக்கனூரில் கல்வி பயின்றார். 1981-1983 வரை திண்டிவனம், புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் 9-10ஆம் வகுப்புகள் பயின்றார். 11-12ஆம் வகுப்புகள் கடலூர், புனித வளனார் பள்ளியில் கல்வி பயின்றார்.

**குருத்துவ பயிற்சி:** 1983-1986 வரை கடலூர், புனித ஆஞ்ஞேஸ் இளங்குரு மடத்தில் இலத்தீன் பயிற்சி பெற்றார். 1986-1989 வரை கோயம்புத்தூர், நல்லாயன் குருத்துவ கல்லூரியில் மெய்யியல் பயின்றார். 1989 முதல் 1990 வரை செங்காட்டில், பயிற்சியிடை பணி அனுபவம் (Regency) பெற்றார். 1990-1994 வரை கோயம்புத்தூர், நல்லாயன் குருத்துவ கல்லூரியில் இறையியல் பயின்றார். 29-04-1994 இல் கக்கனூர், குழந்தை இயேசுவின் புனித தெரேசம்மாள் ஆலயத்தில் மேதகு பேராயர் S.மைக்கேல் அகஸ்டின் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 5-6-1994 முதல் 21-6-1996 வரை உதவி பங்கு குரு, காரைக்கால். 22-6-1996 முதல் 9-9-2004 அழகபசமுத்திரம் பங்குகுரு. 10-9-2004 முதல் 3-6-2007 வரை அணிலாடி பங்குகுரு, 4-6-2007 SAMSSS, இயக்குநர், விக்ரவாண்டி. ஜூன் 2014 விடுமுறை, ஜூன் 2015 முதல் விழுப்புரம், புனித சவேரியார் ஆலய பங்கு குருவாக பணியாற்றி வருகிறார்.

## அருட்தந்தை A. தேவதாஸ்



**வி**ரியூர் பங்கு, திரு.S.M. அந்தோனி-திருமதி. புஷ்ப தெரேஸ் இவர்களின் மகனாக அருட்தந்தை A. தேவதாஸ் விரியூரில் 17-7-1966-இல் பிறந்தார். 24.07.1966-இல் விரியூரில் திருமுழுக்குப் பெற்றார்.

1972-1977 வரை விரியூர், புனித அடைக்கல அன்னை நடுநிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். 1978 - 1985 வரை கடலூர், புனித வளனார் பள்ளியில் கல்வி பயின்றார்.

**குருத்துவ பயிற்சி:** 1982 முதல் 1985 வரை கடலூர், புனித ஆஞ்ஞேஸ் இளங் குருமட பயிற்சி முடித்தபின், 1986-1993 வரை பெங்களூர் புனித பேதுரு குருத்துவ கல்லூரியில் மெய்யியல், மற்றும் இறையியல் பயின்றார். 5-5-1994 ஆம் ஆண்டு விரியூர் பங்கில், மேதகு பேராயர் S. மைக்கேல் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப் பட்டார்.

**பணியிடங்கள்:** 5-6-1994 முதல் 19-6-1996 வரை உதவி பங்குகுரு காரைக்கால். 20-6-1996 முதல் 4-8-2003 வரை பங்குகுரு அணையேரி, 5-8-2003 முதல் கிருஷ்ணன்குப்பம் பங்குகுரு, 10-4-2004 B.Ed. கல்வி பயின்றார். 14-10-2005 முதல் 11-7-2006 வரை குருசுகுப்பம் நிர்வாக பங்குகுருவாக பணியாற்றினார். 18-7-2006 முதல் 6-6-2010 வரை பங்குகுரு மற்றும் தாளாளர், வடலூர். 7-6-2010 முதல் 29-5-2012 கடலூர், புனித ஆஞ்ஞேஸ் இளங்குருமட அதிபர், 1-6-2012 முதல் ஜூன் 2018 வரை எறையூர், புனித வளனார் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் தாளாளர். ஜூன் 2018 முதல் மேல்நாரியப்பனூர், புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்.

## அருட்தந்தை L.A. அருள் புஷ்பம்



**இ**ருந்தை பங்கு, திரு. லூர்துநாதன் - திருமதி. எலிசபெத் இவர்களின் மகனாக அருட்தந்தை L.A.அருள் புஷ்பம் 15-1-1967-இல் இருந்தையில் பிறந்தார். 22-1-1967-இல் இருந்தையில் திருமுழுக்கு பெற்றார். இருந்தை, R.C. பள்ளியில் 1 முதல் 5 வரை கல்வி பயின்றார். 6 முதல் 8 வரை திருநாவலூர் அரசு பள்ளியிலும், 9-12 வரை காட்பாடி, தொன் போஸ்கோ மேல்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார்.

**குருத்துவ பயிற்சி:** 1985-1986 வரை கடலூர், புனித ஆஞ்ஞேஸ் இளங்குருமடத்தில் குருத்துவ பயிற்சி பெற்றார். 1987 முதல் 1989 வரை பெங்களூர் புனித பேதுரு குருத்துவ கல்லூரியில் மெய்யியல் பயின்றார். 1990 இல் செங்காடு பங்கில், பயிற்சியிடை பணி அனுபவம் (Regency) பெற்றார். 1991 முதல் 1994 வரை பெங்களூர் புனித பேதுரு குருத்துவ கல்லூரியில் இறையியல்பயின்றார். 3-5-1994 இருந்தை, புனித சூசையப்பர் ஆலயத்தில், மேதகு பேராயர் S. மைக்கேல் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 05-06-1994 முதல் மே 1995 வரை உதவி பங்குகுரு, ரெட்டியார்பாளையம். 18-5-1995 முதல் 18-5-1996 திண்டிவனம், புனித அன்னாள் உள்விடுதி. 19-6-1996 முதல் 15-11-2002 வரை நங்காத்தூர், பங்கு குரு, புனித மேரி உயர்நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் மற்றும் தாளாளர். 16-11-2002 முதல் 12-7-2006 வரை, பங்கு குரு, புனித யோவான் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் தாளாளர், வடலூர். 6-7-2002 முதல் 7-7-2005 வரை திருவழிபாடு மற்றும் மறைக்கல்வி பணிக் குழு செயலராக பணியாற்றினார். 13-7-2006 முதல் 12-7-2013 வரை, DOS மேலாளர் மற்றும் SADC செயலர், கடலூர். 13-7-2013 Study Leave, 28-08-2013 முதல் 10-6-2014 வரை குருசுகுப்பம் பங்கு நிர்வாக குருவாக பணியாற்றினார். 11-6-2014 முதல் உயர் கல்வி, ஜூன் 2017 முதல் உப்பளம் பங்குகுருவாக பணியாற்றி வருகிறார்.

## அருட்தந்தை S.A.J.R. ஜான் கென்னடி



**இ**ருப்புகுறிச்சி பங்கு, திரு. சவரிமுத்து-திருமதி. வனத்தாயி இவர்களின் மகனாக அருட்தந்தை S.A.J.R.ஜான் கென்னடி விருதகிரி குப்பத்தில் 25-7-1968-இல் பிறந்தார். 11.08.1968-இல் நெய்வேலி-1-இல் திருமுழுக்குப் பெற்றார்.

**குருத்துவ பயிற்சி:** 1986- 1989 வரை பெங்களூர், புனித பேதுரு குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் பயின்றார். 1990 முதல் 1994 வரை இறையியல் பயின்றார். 10-05-1994 அன்று புதுவிருதகிரிகுப்பத்தில் (இருப்புகுறிச்சி பங்கு) மேதகு பேராயர் S. மைக்கேல் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 5-6-1994 முதல் மே 1995 வரை உதவி பங்கு குரு, பேராலயம் புதுவை. ஜூன் 1995 முதல் ஏப். 1997 வரை (M.Th.,) விவிலிய மேற்படிப்பு பெங்களூர் புனித பேதுரு குருத்துவ கல்லூரி. ஜூன் 1997 முதல் ஆக.2004 வரை மேல்வழி பங்கு குருவாகவும், செப்.1997 முதல் ஆக.2004 வரை விவிலிய பணிக் குழு செயலராகவும் பணியாற்றினார். 10.09.2004 - 2011 - முனைவர் பட்டப்படிப்பு, Catholic Institute, பாரீஸ், & Catholic

**அருட்தந்தையர்களுக்கு, குருத்துவ வெள்ளிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

University of லூவேய்ன், பெல்ஜியம். நவ.2011 முதல் மே.2012 - அமெரிக்கா, மசாகுசெட்ஸ் மாநிலத்தில், ரிவியர், புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குப் பணி. 2012 ஆகஸ்டு முதல் பிரான்சில், தமிழ் மக்களின் ஆன்மகுருவாக (Chaplain) பணியாற்றி வருகிறார்.

## அருட்தந்தை A. பெர்க்மான்ஸ் பீட்டர்



**தி**ண்டிவனம் பங்கு, திரு. R. ஆரோக்கியசாமி - திருமதி.A. ரத்தினமேரி இவர்களின் மகனாக அருட்தந்தை A. பெர்க்மான்ஸ் பீட்டர் திண்டிவனத்தில் 05-10-1967- இல் பிறந்தார். 11.10.1967-இல் திண்டிவனத்தில் திருமுழுக்குப் பெற்றார்.

1 - 4 வகுப்புவரை திண்டிவனம், புனித பிலோமினாள் பள்ளியிலும், 5ஆம் வகுப்பு திண்டிவனம், புனித அன்னாள் நடுநிலைப் பள்ளியிலும், 6 முதல் 8ம் வகுப்புவரை திண்டிவனம், புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியிலும் 9 முதல் 12 ஆம் வகுப்புவரை கடலூர், புனித வளனார் பள்ளியிலும் கல்வி கற்றார்.

**குருத்துவ பயிற்சி:** இலத்தீன் பயிற்சியை கடலூர் புனித ஆஞ்ஞேஸ் இளங்குருமடத்தில் பெற்றார். கோயம்புத்தூர், நல்லாயன் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் மற்றும் இறையியல் பயின்றார். 11-05-1994 அன்று திண்டிவனம், R.C. ஆசிரியர் பயிற்சி பள்ளியில், மேதகு பேராயர் S. மைக்கேல் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 5-6-1994 முதல் மே 1995 வரை உதவி குருவாக கடலூர், புனித ஆஞ்ஞேஸ் இளங்குரு மடத்திலும், 14-5-1995 முதல் 19-6-1996 புதுவை பேராலய பங்கிலும் பணிபுரிந்தார். 20-6-1996 முதல் 15-8-1998 தெற்குணம் பங்கு குருவாகவும், 16-8-1998 முதல் 30-7-2002 வரை விக்ரவாண்டி, SAMSSS இயக்குநராகவும் பணி யாற்றினார். 31-7-2002 முதல் 8-9-2003 வரை காப்பாளர், புனித அன்னாள் உள்விடுதி, திண்டிவனம். 9-9-2003 முதல் 6-6-2010 வரை பங்குகுரு, குரும்பாகரம்.7-6-2010 முதல் குருசுகுப்பம் பங்குகுரு, ஜுன் 2012 முதல் மே 2013 வரை விடுமுறை. 19-6-2013 முதல் -ஜுன் 2017 வரை பங்குகுரு, வீராரெட்டிக்குப்பம். ஜுன் 2017 முதல் பாகூர் பங்கு குருவாக பணியாற்றி வருகிறார்.

## அருட்தந்தை R. ஜோசப் பால்



**த**ஞ்சாவூர் மறைமாவட்டம், ஆத்துக்குடி பங்கு, திரு. S. ரொசாரியோ-திருமதி. பெனிக்னா மேரி இவர்களின் மகனாக அருட்தந்தை R. ஜோசப் பால் தூத்துக்குடியில் 15-01-1969-இல் பிறந்தார். 16.02.1969-இல் (இஞ்ஞாசியார்புரம்) தூத்துக்குடியில் திருமுழுக்குப் பெற்றார். 1974 முதல் 1983 வரை காரைக்காலிலும், 1983-1985 வரை 11-12 வகுப்புவரை கடலூர், புனித வளனார் பள்ளியிலும் கல்வி கற்றார்.

**குருத்துவ பயிற்சி:** 1983 முதல் 1986 வரை கடலூர் புனித ஆஞ்ஞேஸ் இளங்குருமடத்தில் பயிற்சி பெற்றார். 1986 முதல் 1994 வரை சென்னை, பூந்தமல்லி திரு இருதய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் மற்றும் இறையியல் பயின்றார். 22-10-1994 ஆம் ஆண்டு புதுவை

## அருட்தந்தை M.S. ஜான் போஸ்கோ



**க**ணக்கன்குப்பம் பங்கு, திரு.சவரிமுத்து-திருமதி. மோட்ராக்கினி இவர்களின் மகனாக அருட்தந்தை M.S. ஜான் போஸ்கோ ஜலந்தரில் 12-03-1967-இல் பிறந்தார். 16.04.1967-இல் ஜலந்தர் கன்டோன்மென்ட், புனித ஜென்மராக்கினி அன்னை ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார். 1974 முதல் 1981 வரை கணக்கன்குப்பம், R.C. நடுநிலைப் பள்ளியிலும், 1981 முதல் 1983 வரை திண்டிவனம் புனித அன்னாள் பள்ளியிலும் கல்வி கற்றார். 1986 முதல் 1989 வரை B.A.Lit., Correspondence, மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரையிலும், 1994-1995 வரை B.Ed., Correspondence, சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும், 1996-1998 வரை M.A.Lit., Correspondence, சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக் கழகத் திலும் முதுகலை பட்ட படிப்பு பயின்றார்.

**குருத்துவ பயிற்சி:** (பதினோறாம் வகுப்பு முதல்) கடலூர் புனித ஆஞ்ஞேஸ் இளங்குருமடத்தில் பயிற்சி பெற்றப்பின், 1986-1994 வரை கோயம்புத்தூர், நல்லாயன் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் மற்றும் இறையியல் பயின்றார். 1989-1990 வரை செங்காட்டில் பயிற்சியிடை பணி அனுபவம் (Regency) பெற்றார். 18-05-1994 ஆம் ஆண்டு கணக்கன்குப்பத்தில் மேதகு பேராயர் S. மைக்கேல் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 5-6-1994 முதல் மே 1995 வரை திண்டிவனம், புனித அன்னாள் உள்விடுதி உதவி குருவாகவும், 20-5-1995 முதல் 18-6-1996 வரை உதவி குரு, திருப்பாப்புலியூரிலும், 19-6-1996 முதல் ஜுன் 1997 வரை புதுவை பேராலய உதவி பங்கு குருவாகவும் பணிபுரிந்தார். ஜுன் 1997 முதல் ஜுன் 1999 வரை கடலூர், புனித வளனார் மேல்நிலைப் பள்ளி விடுதி காப்பாளர், 14-6-1999 முதல் 11-7-2006 அணிலாடி பங்குகுரு, தலைமை ஆசிரியர் திரு இருதய ஆண்டவர் உயர் நிலைப்பள்ளி. 12-7-2006 முதல் 31-5-2007 செஞ்சி, புனித மைக்கேல் மேல்நிலைப் பள்ளி முதல்வர், 1-6-2007 முதல் 11-6-2013 வரை புதுவை பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி முதல்வர். 12-6-2013 முதல் முத்தியால் பேட்டை, பாத்திமா மேல்நிலைப் பள்ளி முதல்வராக பணியாற்றி வருகிறார்.

பேராலயத்தில் மேதகு பேராயர் S.மைக்கேல் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**பணியிடங்கள்:** 19-11-1994 முதல் 13-5-1995 உதவி பங்கு குரு, நெய்வேலி டவுன்ஷிப், 14-5-1995 முதல் 24-1-1996 வரை உதவி பங்குகுரு, புதுவை பேராலயத்திலும், 25-1-1996 முதல் 24-6-1996 உதவி பங்கு குரு விரியூர், 25-6-1996 முதல் 4-8-2003 வரை பங்குகுரு சின்னசேலம், 5-8-2003 முதல் 7-6-2007 வரை விக்ரவாண்டி சாம்ஸ் இயக்குநராகவும் பணியாற்றினார். 8-6-2007 முதல் 21-6-2013 வரை ஏற்காடு, பால்மாடிஸ் எஸ்டேட் மேலாளராகவும், 24-6-2013 முதல் ஜுன் 2018 வரை கடலூர்,DOS மேலாளர் மற்றும் SADC செயலராக பணியாற்றினார். ஜுன் 2018 முதல் நெய்வேலி டவுன்ஷிப், பங்கு குரு மற்றும் வட்டார முதன்மை குருவாக பணியாற்றி வருகிறார்.

125 இளம் உள்ளங்களுக்கு

## அரண்மனையா? சத்திரம்!



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**அரண்மனை வாழ்வு:** எட்டாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவில் உள்ள பால்க் (Balkh) நகரில் செல்வ செழிப்புடன் அரசாண்டவன் **இப்ராகிம் பின் ஆதம்.** அவன் அரண்மனை தங்கம், வெள்ளி மற்றும் விலைமதிப்பற்ற பொக்கிஷங்களால் நிறைந்திருந்தது. அவன் அணிந்திருந்த ஆடைகள், காலணிகள் எல்லாமே நவரத்தினங்களால் இழைக்கப்பட்டிருந்தன.

**இரவில் கண்ட காட்சி:** ஓர் இரவு இப்ராகிம் தன் பகட்டான கட்டிலில் படுத்துறங்கியபோது மேல் தளத்திலிருந்து ஏதோ சப்தம் கேட்டது. "யார், என்ன சப்தம்?" என்று மன்னன் கேட்டபோது, "இங்கு புல் மேய வந்த ஒட்டகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று ஒரு குரலொலி கேட்டது. அரசன், "மேல் தளத்தில் ஒட்டகத்தை தேடுவது முட்டாள்தனம்" என்றான். மீண்டும் அந்த குரல், "ஓ! அறிவிலியே, பட்டாடை அணிந்து பகட்டுடன் தங்க கட்டிலில் சாய்ந்து கொண்டு இறைவனை தேடுவது அதைவிட முட்டாள்தனம்!" என்றது. இந்த வார்த்தைகள் இப்ராகிமின் ஆன்மீகத் தேடலை யோசிக்க செய்தது.

**அரண்மனையில் அறிவொளி:** அடுத்த நாள் அரசன் தன் அரண்மனைக்குள் மக்கள் தடையின்றி உள்ளே வர அனுமதித் தான். பலரும் பகட்டாக ஆடை அணிந்து உள்ளே நுழைந்தார் கள். அப்போது கிழிந்த கந்தலாடை அணிந்த ஒரு கிழவனும் உள்ளே நுழைந்தான். அவன் முகத்தில் ஏதோ பிரகாசம் இருந்தது. ஆகையால் காவலர்கள் எவரும் அவனை தடுக்க வில்லை. இதனை கண்ட மன்னன் அவனை பார்த்து, "அரண் மனைக்குள் இப்படிதான் வருவாயா?" என்று கேட்டான். அதற்கு அவன், "நான் சத்திரத்திற்குதானே வந்துள்ளேன்" என்றான். அதற்கு மன்னன் கோபத்துடன், "இது ஒன்றும் தெருவோர சத்திரம் அல்ல" என்றான். அதற்கு அந்த கிழவன், "நான் அரண்மனை எதையும் காணவில்லை. தங்கி செல்லும் சத்திரத்தையே காண்கிறேன்" என்றான். மேலும் அரசனை நோக்கி, "உனக்கு முன் இங்கே இருந்தவர் யார்?" என்று கேட்டான்.

இப்ராகிம்: "என் தந்தை"

கிழவன், "அதற்கு முன்?"

இப்ராகிம்: "என் தாத்தா"

கிழவன், "அவருக்கு முன்பு இருந்தது யார்?"

இப்ராகிம்: "அவருடைய தந்தை"

கிழவன், "இப்போது அவர்கள் எல்லாம் எங்கே?"

இப்ராகிம்: "அவர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள். இப்போது இல்லை?"

"ஆக அவர்கள் யாரும் இப்போது இல்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் இது தங்கும் விடுதியாகதான் இருந்துள்ளது. நீயும் ஒரு நாள் இறப்பாய். இந்த அரண்மனையை விட்டு சென்று விடுவாய். இப்ராகிம், இப்போது புரிந்துகொள். நீ இருப்பது அரண்மனை அல்ல, தங்கும் விடுதிதான்" இதை சொன்னதும் அந்த கிழவன் அங்கிருந்து சென்று மறைந்துவிட்டான்.

**சிந்தனையின் முடிவு:** சிந்திக்க ஆரம்பித்தான் இப்ராகிம். தன் குடும்பம், செல்வம் அரண்மனை எல்லாவற்றையும் துறந்து துறவுபூண்டு காடு சென்று நிறைவாழ்வை தேடலானான். அவன் கி.பி. 782 ல் இறந்தான். சிரியாவில் கல்லறையில் மீளாத்துயில் கொண்டுள்ளான்.

---

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **மூன்று வாரங்களுக்கு முன்** பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO/ DD/CHEQUE/ வங்கி மூலம் செலுத்தலாம். **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

**வங்கி கணக்கு விவரம்**

| | | |
|---|---|---|
| BANK NAME | : | IOB-PONDICHERRY MAIN JAWHARLAL NEHRU STREET, Pondy-1. |
| A/C Name | : | MISSION PRESS |
| A/C. No. | : | 007002000000123 IFSC :IOBA0000070 |

## யார் தகுதியுடையவன்?



– G. போனிஃபாஸ் ஜூலியன், புதுவை–9.

ஒரு தோட்டக்கலை நிபுணர் இருந்தார். அவர் விவசாயத்தில் உயர் கல்வி படித்தவர். பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்து வந்தார். அவருக்கு விவசாயத்தின் மேலும் தாவரத்தின் மேலும் அதிக ஈடுபாடு உண்டு. தாவரத்திற்கும் உயிர் உண்டு என்று அடிக்கடி மாணவர்களுக்கு போதிப்பார். அவருக்கு சொந்தமாக ஒரு பெரிய தோட்டம் இருந்தது. அதில் மரங்கள், செடி கொடிகள், அதிகப்படியான பழ வகைகள் முதலியவைகளை பராமரித்து வந்தார். வேலை பளுவின் காரணமாக அவரால் அவருடைய தோட்டத்தை பராமரிக்க முடியவில்லை. அதற்கு தகுந்த ஆளை தேடிக் கொண்டிருந்தார். விளம்பரம் செய்தார். அந்த வேலைக்கு சில கல்வித் தகுதிகளும், முன் அனுபவமும், நேர்மையும் இருக்க வேண்டிய பண்புகளை விளம்பரத்தில் தெரிவித்தார். பல இளைஞர்கள் இதற்கு விண்ணப்பித்தார்கள். அவர்களில் பத்து பேரை தேர்ந்தெடுத்து நேர்முகத் தேர்வுக்கு அழைத்தார். குறிப்பிட்ட நாளில் அந்த பத்து பேரும் வந்தார்கள். அனைவருடைய சான்றிதழ்களையும் பரிசிலித்த பின்பு, ஓர் போட்டி வைத்தார். வந்த ஒவ்வொருவருக் கும் ஒரு பூச்சாடியையும் விதைகளையும் கொடுத்தார். இந்த விதைகளை இந்த பூச்சாடியில் வைத்து வளர்த்து அழகிய பூக்களுடன் ஒரு குறிப்பிட்ட நாளில் எடுத்து வாருங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார். அனைவரும் சென்றார்கள். விதைகளை ஜாடியில் வைத்தார்கள். அதற்கு எருவிட்டு வளர்க்கத் தொடங்கி னார்கள். குறிப்பிட்ட தினத்தன்று அனைவரும் தங்களுடைய பூச்சாடிகளை எடுத்து வந்தார்கள். இந்த தோட்டக்கலை நிபுணருக்கு ஒரே ஆச்சரியம். அனைவரும் பூத்து குலுங்கும் பூச்சாடியை கொண்டு வந்தனர். இந்த பத்து பேரில் ஒரு இளைஞன் மட்டும் அந்த நிபுணரிடம் ஐயா, நீங்கள் கொடுத்த இந்த விதையை நட்டு முயற்சித்தேன், எவ்வளவு எரு போட்டும் இது வளரவில்லை. இது சொத்தை விதை என்று நினைக்கிறேன், அதனால் ஜாடியில் பூ வளர்க்க இயலவில்லை என்று தன்னுடைய நிலையை தெரிவித்தான். எல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தார்கள். யாருக்கு இந்த வேலை கிடைக்கப் போகிறது என்று. சிறிது நேரம் கழித்து இந்த நிபுணர் கூறிய சொற்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் கூறியது நான் உங்கள் அனைவருக்கும் சொத்தை விதைகளை தான் தந்தேன் அது பூக்காது என்று எனக்குத் தெரியும், நீங்கள் ஒன்பது பேரும் இந்த விதையை தூக்கி போட்டு விட்டு வேறு நல்ல விதைகளை வாங்கி பயிரிட்டு கொண்டு வந்தீர்கள். ஆனால் மற்ற ஒருவனோ, இந்த தவறை செய்யாமல் என்னிடம் உண்மையை கூறினான். அதனால் அவனை நான் என் தோட்டத்தில் பணி செய்ய அமர்த்துகிறேன், மற்றவர்கள் சென்று விடலாம் என்றார். தங்களுக்குத்தான் கிடைக்கும் என்று தங்கள் தவறை உணர்ந்து உண்மையை மறைத்ததற்காக மனம் வருந்தி சென்றார்கள்.

எதிலுமே நேர்மை இருக்க வேண்டும். குறிப்பாக பணிபுரியும் இடத்தில் கடமை உணர்வோடும் நேர்மையுடனும் காலம் தவறாமையை கடைபிடித்தும் செயல்பட வேண்டும். இன்று சமுதாயத்தில் காணப்படும் ஒரு நிலை, ஒரு சில இடங்களில் படித்த படிப்பிற்கும், செய்யும் தொழிலுக்கும் சம்பந்தமே இருக்காது. அதிகப்படியாக படித்த இளைஞர்கள் தங்களுடைய உயர் கல்வியை மறைத்துவிட்டு, அடிமட்ட வேலைக்கு கூட செல்ல தயாராக இருக்கிறார்கள். காரணம் வேலையில்லா திண்டாட்டம். அநேக தொழிற்சாலைகள் இன்று மூடி கிடப்பதற்கு காரணம் பணிபுரிவோரிடம் நேர்மை இல்லாத தன்மையும், வேலையில் ஈடுபாடு இல்லாத எண்ணமும் தான்.

நம் நாட்டிற்கும் வெளி நாட்டுக்கும் பல வித்தியாசங்கள் இருந்தாலும், ஒன்று என் நினைவிற்கு வருவது, வெளி நாடுகளில் அனைத்து வேலைகளுக்கும் மதிப்பளிப்பார்கள், இது தாழ்ந்த வேலை, மட்டமான வேலை, உயர்ந்த வேலை என்று எண்ண மாட்டார்கள்.ஆனால் நம் நாட்டிலோ செய்யும் வேலையை வைத்து ஒருவனை மதிப்பிடுவார்கள். உயர்ந்தபதவியில் இருக்கும் ஒருவனுக்கு ஒரு மரியாதையையும், சாதாரண வேலை செய்பவனுக்கு ஒரு மரியாதையையும் கொடுப்பது நாம் காண முடிகிறது. அதனால்தான் பணியில் ஈடுபாடு இல்லாததையும் நேர்மை இல்லாத தன்மையும் காண முடிகிறது. எல்லா தொழிலுக்கும் மதிப்பளிப்போம். இதற்கு புனித சூசையப்பர் ஓர் எடுத்துக்காட்டு.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 22-ஆம் படலம்

வாதை 9– மீண்டும் ஆண்டவர் மோசேயிடம், எகிப்து நாட்டின்மேல் இருள் ஏற்படவும் இருளில் அவர்கள் தடுமாறவும் உன் கையை வானோக்கி நீட்டு என்றார். மோசே வானத்தை நோக்கித் தம் கையை நீட்டினார். மூன்று நாள்களாக எகிப்து நாட்டைக் காரிருள் கவ்வியிருந்தது. (விப.10:21–22).

காப்பியப் பாடல் 1100

12 **இசுரயேலரின் கடவுளாம் ஆண்டவர் ஒன்பது முறை பார்வோன் மனம் மாறி அவர்தம் ஆணையை ஏற்று செயல்பட வாய்ப்பு நல்கியும் அவன்தன் அதிகார முனைப்பிலிருந்து மனம் மாறாமல் நெஞ்சை நிமிர்த்தி நின்றதால்தான் பத்தாம் வாதையில் பார்வோனும் அவன் மக்களும் யாவே கடவுளின் தண்டனையை அனுபவித்தார்கள்.**

இந்தப் புரிதலை மனிதன் ஏற்கையில்,
சொந்த விண்ணகத் தந்தையின் அன்பில்
பங்கு பெற்றே ஒளிமய மான
பங்கம் இலாத வாழ்வுதான் வாழ்வான்;
அன்று அந்த ஆணவப் பார்வோன்
நன்று இறைவன் பன்முறை வாய்ப்பு
நல்கியும் அவனறி யாமை முனைப்பினால்,
வெல்லும் மனநிலை ஒவ்வொரு சமயமும்
கொண்டிறை அன்புக் கெதிராய் எழுந்தனன்!
எண்டிசை நன்கு அறியுமே, இறைவன்
ஒன்பது முறைகள் அவன்உளம் மாற,
மன்பதை உலகுள நாளெலாம் அறிய
வாதைகள் வரிசையாய்த் தந்தும் பார்வோன்,
தாதையின் அன்பினை ஏற்காப் புதல்வனாய்
அவரைத் துறந்து தன்பலம் பெரிதென
தவறே செய்தான்! தலைப்பே றனைத்தும்
மடிந்தொழி பொழுதில் வழிவே றின்றி
இடிந்தவன் கதறி இசுரயேல் இனத்தவர்
விரைந்துடன் வெளிச்செலு மாறவன் கூறியே
கரைந்துலை காகமாய்ப் பறந்தவன்! பதறினான்!

காப்பியப் பாடல் 1101

13 **“மூன்று நாள்களாக ஒருவரை ஒருவர் பார்க்க முடியவில்லை. தான் அமர்ந்த இடத்திலிருந்து எவனும் எழுப்பவும் இல்லை. மாறாக, இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் அவர்கள் உறைவிடங்களில் வெளிச்சம் இருந்தது.“ (விப.10:23) ஒன்பதாம் வாதை எகிப்தில் காரிருளைக் கொண்டு வந்து எகிப்தியர்களை மட்டும் வதைத்தது.**

வெளிச்சமோ இசுரயேல் இனத்தவர் இடத்தில்
பளிச்சென ஒளியினைப் பாய்ச்சுதல் அறிந்தே
வியந்தான் பார்வோன்! நயந்தவர் கடவுளை
இயன்ற வழியில் வேண்டியே நிறையிருள்
மறைந்திடு மாறே செய்தற் கெண்ணினான்;
எனவே அழைத்து மோசே இடம்அவன்
முனமே சொன்னதன் படியே அவரினம்
சென்றே இறைவனைத் தொழுதிடச் சொன்னான்;
சொன்னான் எனினும் அவர்இனம் போகையில்
ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும்
நாட்டில் கோசேன் இடம்விட் டேகவே
வேண்டும் என்றொரு விதியும் வகுத்தபின்
மீண்டும் மனத்துள் வைத்தொரு மறுப்பே;
அப்படிச் சொன்னவன் அவர்கள் தம்முடன்
ஒப்பியே அவரவர் குழந்தைகள் அழைத்தே
செல்லலாம் என்றான்; அதனால் பெண்கள்
இல்லினில் இருந்து ஏகத் தடையிலை
என்பது உறுதியாய்த் தெரிந்தது; எனினும்
முன்பவன் சொன்னதில் மாற்றம் வேண்டுமாய்
இறுதியாய் அவர்களின் தொழுகை முறையினை
உறுதியாய் மோசே விளக்கியே விளம்பினார்.

தொடரும்...

---

## சிறுகதைப் போட்டி - பரிசு ரூ.11000/-

திருமதி. **ஜே. ஜெர்மன் ஞானசௌந்தரி நினைவு சிறுகதைப் போட்டிக்கு** சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன.

பக்கம் : **2 பக்கத்திற்கு** மிகாமல் சிறுகதை வந்து சேர வேண்டிய இறுதி

நாள்: **30-06-2019.** தேர்வாளரின் தீர்ப்பே இறுதியானது. முடிவு போட்டி நடத்துவோரின் கட்டுப்பாட்டிற்குரியது.

**பரிசு:**

முதல் பரிசு ரூ. **5000**/- 2-ம் பரிசு ரூ. **2000**/- 3ஆம் பரிசு ரூ. **1000**/- ஆறு பேருக்கு ஆறுதல் பரிசாக ரூ. **500**/- வீதம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

மதுரை இளங்கவின். G.K. ஹோம்ஸ். 14,26 விஸ்வநாதபுரம் 3வது தெரு, கோடம்பாக்கம். சென்னை - 600 024 செல்: **9894482497**

### திருத்தந்தை பிரான்சிஸ்

**“நாம் வாழும் 21ம் நூற்றாண்டில், பல நாடுகளின் தலைவர்கள், காயப்பட்டிருக்கும் மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதற்குப் பதில், அந்த காயங்களை மேலும் ஆழப்படுத்தும் வண்ணம், மக்களிடையே பிளவுகளையும், மோதல்களையும் வளர்த்து வருவதை எண்ணி, நாம் வெட்கமும், வேதனையும் அடைகிறோம். இவர்கள் வளர்க்கும் பகைமை உணர்வுகளால் உயிரிழப்பது, பெரும்பாலும், அப்பாவி மக்கள் என்பதை, இலங்கையில் நிகழ்ந்த உயிர்ப்புப் பெருவிழா தாக்குதல்கள், மீண்டும் ஒருமுறை நமக்குக் கூறியுள்ளன.”**

---

### இறைவனில் இணைந்த
### 16-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 28-02-1945



மறைவு: 17-05-2003

## ஜோசப் அனந்து M.A.

Dy.Director, Dept.of Statistics, S/o. A. ANANDOU

**ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தியடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.**

**17-5-2019 அன்று காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர், புனித ஜான்மரி வியான்னி ஆலயத்திலும், காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப் படும்.**

பிரிவால் துயருறும்

**தாய், மனைவி, மகன்கள், மருமகள்கள், பேத்திகள், சகோதரர்கள், சகோதரி மற்றும் அனந்து குடும்பத்தினர்கள் புதுவை, காரைக்கால்.**

---

### விண்ணக வாழ்வின்
### 14-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 8.11.1974



மறைவு: 23.5.2005

## Mrs. ஆனி சித்ரா அனந்து B.A.B.L

(Daughter in law of late Joseph Anandou)

**"என்னை அறிந்து நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்கள்"**

**ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப் பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தி யடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.**

**23-5-2019 காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர் புனித ஜான்மரி வியான்னி ஆலயத்தில் பாடல் திருப்பலி நிறைவேற்றப் படும்.**

பிரிவால் துயருறும் கணவர்

**அனந்து ஜேம்ஸ்ராஜ்**

**மகள்கள், சகோதரர், சகோதரி அனந்து குடும்பத்தினர்.**

## விண்ணக வாழ்வின் 17-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. **மனோ விவேகானந்தம் அந்துவான்**

(Millitaire en Retraite)

சீவியத்தில் உம்மை அதிகமாக நேசித்தோம் மரணத்தில் உம்மை ஒருபோதும் மறவோம்.

இறப்பு: 12-5-2002

இரக்கம் மிகுந்த இயேசுவே!
எங்கள் குடும்பத்தின் ஒளி
விளக்காய்த் திகழ்ந்து, தன்
வாழ்வின் கடமைகளை முடித்து,
எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி
விட்டுப் பிரிந்து சென்ற இவரின்
ஆன்மாவிற்கு நித்திய
இளைப்பாற்றியை அளித்தருளும் -
ஆமென்.

பிரிவால் துயருறும்

**அன்பு மனைவி**

பிள்ளைகள், மருமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.

புதுவை.

திருப்பலி 12-5-2019 ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக் காக செபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

## விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மரிய சூசையம்மாள் (எ) பாப்பாதாய் பத்மா**

மண்ணில் மலர்ந்தது: 07-08-1922

விண்ணில் மலர்ந்தது: 13-05-2009

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
- யோவான்.11:25

அன்புத் திருவுருவே!
ஆருயிரே! அம்மா!
இணையில்லாப் பேரெழிலே!
ஈகையுடன் மிளிர்ந்தவரே!
உத்தமியாய் உற்ற துணையாய்
ஊக்கச் சாரல் ஆனாய் நீ!
எளிமையை ஏந்திக் கொண்டு
ஏசுபிரான் வழிநடந்தாய் நீ
ஐயமில்லை! வான்வீடு உனக்கே சொந்தம்
ஒருபோதும் மறப்பதில்லை உனை எங்கள் நெஞ்சம்
ஓங்கார நாதமாய்
ஔடத அமுதமாய்
உன் அமைதியை அகலாக்கி அன்பை திரியாக்கி எம்மை ஒளிர செய்தாயே அம்மா! இனி அந்த ஒளியை எங்கு காண்போம்!

அன்பு பிள்ளைகள்

*மகன், மருமகன், மகள்கள், மருமகன்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப்பேரன்கள், பேத்தி, மற்றும் உற்றார் உறவினர்கள்.*

புதுவை.

திருப்பலி: 13–5–2019 காலை 6 மணிக்கு நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை சென்மராக்கினி மாதா பேராலயத்திலும், மதியம் 12.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

## 13-ம் ஆண்டு நினைவு



திருமதி. **லூர்துமரி** திரு.**செல்வநாதன்**

தோற்றம்: 1910 மறைவு:14-5-2006

தோற்றம்: 1908 மறைவு:29-1-1994

"வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவது இல்லை"

இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 14–5–2019 அன்று கோவிலானூர் புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவர்களது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

நினைவுகூறும்

Sr.லாரன்ஸ் செல்வநாதன்,
Fr. S. அல்போன்ஸ், அரசக்குழி.
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்

---

## விண்ணக வாழ்வின் 17-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:24-11-1930



மறைவு: 18-05-2002

M.L. **சூசை அமலநாதன்**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 18-05-2019 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பணிக்கன்குப்பம் புனித விண்ணரசி அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

பிரிவால் துயருறும்

மனைவி, மகன்கள், மகள்கள்,மருமகள்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.

பணிக்கன்குப்பம்.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1) இறைமக்கள் / குருக்கள் / துறவியர் / பொதுநிலையினர் / அழைப்பு / உருவாக்கம் / பயிற்சி தடைகள் 2) அருள்சாதன வாழ்வு 3) சமூக, பொருளாதார, வாழ்க்கை 4) அரசியல்வாழ்வு. 5) கல்விப் பணி. 6) மறைமாவட்ட நிர்வாகம் ஆகியவை ஆகும். இவற்றின் அடிப்படையில் 650 சுற்றறிக்கைகள் பங்குகள், சபைகள், கல்வி நிறுவனங்கள், செனேட், மறைவட்டங்கள் - இங்கெல்லாம் அனுப்பப்பட்டன. இங்கிருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி ஆய்வு கேள்வித் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாமன்றம் வரும் அக்டோபர் 27 முதல் 31 வரை நடைபெறுகிறது. அதுவரை மக்களின் எதார்த்தமான சூழ்நிலைகள், தேவைகள், தடைகள் ஆகியவற்றை கண்டறிய இந்த காலம் அமைகிறது. இன்று உங்களுக்கு வழங்கப்படும் கேள்வித் தொகுப்பின் அடிப்படையில் கலந்துரையாடல்கள் அமையும். இம்மாமன்றத்தில் 270 பேர் பங்கு பெறுகிறார்கள். இந்த பிரதிநிதிகளுடன் பேராயர் அவர்கள் நியமிக்கும் 10 பேரும் சேர்ந்து இம்மாமன்ற உறுப்பினர்கள் 280 பேர் இருப்பார்கள்.

இவ்வாறு, அருட்தந்தை பிலோமின்தாஸ் அவர்கள் விரிவான ஒரு கருத்தூட்டல் அமர்வை நிகழ்த்தினார். உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் அவர் பதில் அளித்தார்.

**மாமன்ற அறிமுகம்:** அருட்தந்தை S. பாஸ்கல்ராஜ், உயர் மறைமாவட்ட திருமண நீதிமன்ற நீதிபதி:

1844இல் புதுவையில் இடம் பெற்ற மாமன்றம் வரலாற்றுப் பூர்வமானது. அந்த மாமன்றம், **மறைமாவட்ட அளவில் நடைபெற்ற உலகிலேயே முதல் மாமன்றம்.** இதில் எட்டப்பட்ட முடிவுகள் மற்ற மாமன்றங்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது பெருமைக்குரியது. MEP அருட்தந்தையர்கள், தங்களது பணிகளில் சந்தித்த பல சிக்கல்களை வைத்துதான் மாமன்றத்தை நிகழ்த்தினார்கள். அதே வேளையில் பலமுனை முன்னேற்றப் பாதையில் மறைமாவட்டத்தைக் கொண்டு செல்லும் நோக்கில் அதனை நிகழ்த்தினார்கள். பலதரப்பினரின் கருத்துகளை மனதில் கொண்டு ஆராய்ந்து முடிவுகளையும் விதிமுறைகளையும் வகுத்து, அதன்படி சிறப்பான பணியாற்றினார்கள். வரும் அக்டோபரில் நிகழ இருக்கும் மாமன்றம் வரலாற்றுப்பூர்வமானது. நமது உயர் மறைமாவட்ட பேராயரின் வழிகாட்டுதலில், இங்கே இருக்கின்ற மையக் குழுவினரின் செயல்பாடுகளுடன், இங்கு குழுமி வந்திருக்கும் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் கருத்தாய்வும், கருத்துப் பகிர்வும் நேர்மனதுடன் மேற்கொள்ளும் போது, நாம் சிறப்பான முடிவுகளையும், வழிமுறைகளையும் கண்டறிந்து கொள்ள முடியும். இவ்வாறு அருட்தந்தை அவர்கள்சிற்றுரையாற்றி மாமன்ற அறிமுகம் செய்தார்.

**3-ஆவது மாமன்ற அறிவிக்கை ஆணை** (Decree) **விழா திருப்பலி:** முற்பகல் 11.45 மணி அளவில் நமது பாசமிகு பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D., D.C.L. அவர்கள் தலைமையில், நமது உயர்மறைமாவட்ட பேராலயம் - புதுவை, ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் விழா திருப்பலி நடைபெற்றது. பேராயர் அவர்கள் தமது மறையுரையில் பின்வரும் கருத்துகளை வழங்கினார்.

♦ நாம் அனைவரும் இறைவனின் அருளால் இங்கு ஒன்றுசேர்ந்து வந்திருக்கிறோம். எந்த ஒரு அமைப்பிலும், வளர்ச்சி என்பது கடவுளுடைய திருவுளத்தோடு ஒத்துழைப்பது ஆகும். நமது ஆன்மீக, சமூக திருவருட்சாதன வாழ்வில் இந்த ஒத்துழைப்பையும் வளமையையும் வளர்த்தெடுக்க வேண்டும்.

♦ 1844-ஆண்டு இதே பேராலயத்தில் இடம் பெற்ற மறைமாவட்டத்தின் முதல் மாமன்றத்தில் 16 MEP அருட்தந்தையர்களும் 3 சுதேசி குருக்களும் பங்கேற்று அன்றைய சூழலில் அன்றைய பணி வாழ்வுக்கானவற்றை ஆராய்ந்து இறைவனது பிரசன்னத்தில் அவரது வார்த்தையின் வழியில் விதிமுறைகளையும் வழிமுறைகளையும் வகுத்துக்கொண்டார்கள். அதனடிப்படையிலே அவர்களது பணிவாழ்வு அமைந்தது.

♦ இறைவனுக்கு நாம் மிகவும் முக்கியமானவர்கள். அவரது அன்பும் இரக்கமும் நம்மை சூழ்ந்து வழிநடத்துகிறது. எனவே, நமது வாழ்க்கை இறைவார்த்தையையும், செபத்தையும், நற்கருணையையும் மையப்படுத்திய வாழ்வு.

♦ இன்றைய முதல் வாசகத்தில் புனித பேதுருவும் புனித யோவானும் ஆலயத்திற்கு செல்கின்ற நிகழ்ச்சியை வாசிக்க கேட்டோம். நடக்க இயலாத ஒருவரை அவர்கள் குணம்பெறச் செய்ததைக் கேட்டோம். “என்னிடம் உள்ளதை உனக்கு கொடுக்கிறேன். ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயரால்



எழுந்து நட” என்று பேதுரு கூறுகிறார். அந்த மனிதனும் குணம் பெற்று எழுந்து நடக்கின்றார். இறைவார்த்தையை மையப்படுத்தி நம் வாழ்வு அமைய வேண்டும்.

♦ இன்றைய நற்செய்தியில் எம்மாவுஸ் சீடர்களின் அனுபவத்தை சிந்தித்தோம். அவர்கள் இறைவார்த்தையால் வழிநடத்தப்பட்டார்கள். திருநற்கருணையை கொண்டு அவர்கள் யேசுவை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். கிறிஸ்துவின் வார்த்தையால் நடத்தப்படுகிற நாம், தேவ நற்கருணையில் இயேசுவையே பெறுகிறோம். நமது நம்பிக்கை வாழ்க்கை அன்பு வாழ்க்கை, நமது சமூக வாழ்க்கை, தன்னையே நமக்காக பலியாக்கி இறந்து உயிர்த்த ஆண்டவரின் சாட்சிய வாழ்வாக அமைத்துக்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். அன்பு, சமாதானம், சமத்துவம் ஆகியவற்றைக்கொண்ட வாழ்வு வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். செபிக்க அழைக்கப்படுகின்றோம்.

♦ இறைவார்த்தையின் சக்தியிலும், ஒளியிலும் நம் வாழ்வு இருக்கவேண்டும். மற்றவர்களுக்கு நாம் வழங்கக்கூடிய மாபெரும் கொடை யேசுகிறிஸ்துதான், அவர் வழங்கும் கடவுளின் அருள்தான்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்..

11-ம் பக்கத் தொடர்ச்சி...

♦ இன்றைய சூழலில் நற்செய்தியை எவ்வாறு அறிவிப்பது? வாக்கினால் மட்டுமல்ல, சாட்சிய வாழ்வு வழியாக அது வழங்கப்பட வேண்டும். மறைசாட்சிய வாழ்வாக அது அமைய வேண்டும். அன்பு, பகிர்வு, சமாதானம் மிகுந்த வாழ்க்கை அது அமைய வேண்டும். இதனடிப்படையில் நாம் செபிக்கும் மக்களாக, பணிபுரியும் மக்களாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

♦ அன்பு சகோதர சகோதரிகளே, ஈஸ்டர் பெருவிழா நாளில் இலங்கையில் அந்தோணியார் ஆலயம், செபஸ்தியார் ஆலயம், மிக்கேல் சம்மனசானவர் ஆலயம், மற்றும் சீயோன் ஆலயத்தில் வழிபாட்டுக்காக குழுமியிருந்த மக்கள்மேல் தீவிரவாத தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு 350 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அவர்களுக்காக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். தீவிரவாதம் தடுக்கப்பட நாம் செபிப்போம். யாராயிருந்தாலும் மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும், மனித உயிர் மதிக்கப்பட வேண்டும். இவ்வாறு நமது பேராயர் அவர்கள் தமது மறையுரையை நிறைவு செய்தார்.

திருப்பலியில் திருவிருந்துக்குப்பின், மேதகு பேராயர் அவர்கள் மூன்றாவது மாமன்றம் அறிவிக்கை ஆணையை அனைவருக்கும் வாசித்து அளித்தார். அனைவரும் கரகோஷத் துடன் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

திருப்பலி முடிந்த பின், மாமன்ற இலச்சினை, மாமன்ற செபம் மற்றும் பாடல், இதற்கான குறுந்தகடு, மாமன்ற ஆய்வுக்கான வினாத் தொகுப்பு நூல் ஆகியவற்றை நமது பேராயர் வெளியிட்டு ஆசி வழங்கினார். அருட்தந்தை A.J. பிலோமின்தாஸ் அவர்கள் இலச்சினையின் உட்பொருளை விளக்கிக் கூறினார்.

மூன்றாவது மாமன்ற அறிவிக்கை ஆணை வெளியிட்ட நமது பாசமிகு பேராயர் மேதகு **அந்தோணி ஆனந்தராயர்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றி கூறுகிறோம். இந்நிகழ்வுகளின் நெறியாளர் Fr.A.J. **பிலோமின்தாஸ்,** மையக்குழு உறுப்பினர்கள், அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்த மறைமாவட்ட பொருளர் அருட்திரு. **கிரகோரி** அவர்கள், பேராலயப் பங்குதந்தை அருட்திரு. **அப்போன்ஸ் சந்தனம்,** மறைமாவட்ட சான்சலர் மற்றும் ஆவண காப்பாளர் அருட்தந்தை A. **மெல்கிசதேக்,** பெத்திசெமினேர் மேல்நிலைப் பள்ளி முதல்வர் அருட்திரு. R. **பாஸ்கல்ராஜ்,** பேராயரின் கியூரியா செயலர் அருட்திரு. **ஜெயந்த்ராயன்,** அருட்திரு.**லூர்து ஜெயராஜ்,** மாமன்ற ஜெபம் இயற்றிய பேராயரின் செயலர் அருட்திரு. **குழந்தை யேசுராஜா,** மாமன்ற பாடல் மற்றும் இசையமைத்த பேராலய பங்கு உதவிகுரு அருட்திரு. L. **ஆரோக்கியதாஸ்,** வட்டார முதன்மை குருக்கள், இருபால் துறவியர்கள் மற்றும் இறைமக்கள் சார்பாக பங்கேற்ற சகோதரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



இன்று நாம் பங்கேற்கும் நிகழ்வுகள் நாளைய வரலாறு. வாழ்வு செம்மையுற ஒன்று சேர்ந்து உழைப்போம், ஒத்துழைப் போம். இறைவனுக்கு நன்றி!

**- ஆசிரியர்.**




**Published and Printed by** Fr.C.Antoni Roche **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Rev. Fr. C.Antoni Roche.**